# <u>பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்</u>

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1–ன் கீழ் மனுதாரர் / எதிர்மனுதாரர் தரப்பு 1ஆவது சாட்சியாக விசாரிக்கப்பட்டு **2026–ஆம்** ஆண்டு **ஏப்ரல்** திங்கள் **18** ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்.................................................................. | கிராமம்..................................................................... |
| தந்தை/கணவர் பெயர்......................................... | தாலுக்கா.................................................................. |
| தொழில்................................................................. | மாவட்டம்............................................................ |

------------------------------------------------------------------------------------------------------

# HMGOP No.463/2025

# 18.04.2026

**ம.த.சா.1 – திரு.தரணிகுமார் த/பெ. லேட்.ராஜய்யன்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நான் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுக்காவில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

1. 08.12.2006 தேதியிட்ட விக்கிரைய பத்திரத்தின் நகல் (ஆவண எண் 7507/2006) (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பவித்ரா என்பவரது இறப்பு சான்றிதழ் அசல் **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பவித்ரா என்பவரது வாரிசு உரிமை சான்றிதழ் அசல் **ம.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. கணியினில் பதிவிறக்கம் செய்யப்பட்ட இளவர்.கிரித்திக்ராஜ் என்பவரது பிறப்பு சான்றிதழ் **ம.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. கணியினில் பதிவிறக்கம் செய்யப்பட்ட இளவர்.காவியா என்பவரது பிறப்பு சான்றிதழ் **ம.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 10.10.2025 தேதியிட்ட விக்கிரைய ஒப்பந்தம் அசல் (ஆவண எண்.9310/2025) **ம.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. இளவர்.காவியா என்பவருக்கு அவரது பள்ளியில் வழங்கப்பட்ட Bonafide Certificate **ம.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. இளவர்.கிரித்திக்ராஜ் என்பவருக்கு அவரது பள்ளியில் வழங்கப்பட்ட Bonafide Certificate **ம.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. கணியினில் பதிவிறக்கம் செய்யப்பட்ட மனுசொத்திற்கான வில்லங்கச் சான்றிதழ் **ம.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. கணியினில் பதிவிறக்கம் செய்யப்பட்ட மனுசொத்திற்கான வழிகாட்டு மதிப்பு **ம.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.